# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்.188/பேரூ/2022**
**நாள்: 21.11.2022**

திரு. G. வெங்கடேஷ்,
கச்சிராயப்பாளையம். ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வடக்கனந்தல் பேரூராட்சி. ... எதிர்மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம், நெ.233, எல்.எப். ரோடு, கச்சிராயப்பாளையம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. G. வெங்கடேஷ் என்பவரது 14.10.2022 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2022 அன்று பெறப்பட்டு 188/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தள்ளக்குறிச்சி மாவட்டம், நெ.233, எல்.எப். ரோடு, கச்சிராயப்பாளையம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. G. வெங்கடேஷ் தனது 14.10.2022 நாளிட்ட முறையிட்டு மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கடந்த 24.06.2022 தேதியில் நான்கு இனங்களில் தகவல் கேட்டு கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சி அலுவலக பொது தகவல் அலுவலர் மற்றும் செயல் அலுவலருக்கு பதிவஞ்சல் மூலம் விண்ணப்பம் ஒன்றை அனுப்பியிருந்தேன். அதனை கடந்த 25.06.2022 அன்று பெற்றுக்கொண்ட பொது தகவல் அலுவலர் 30 நாட்களுக்குள் நான் கோரிய தகவல்களை வழங்காததால், நான் கடந்த 01.08.2022 தேதியில் கடலூர் மாவட்ட உதவி பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பதிவஞ்சல் மூலம் முதல் மேல்முறையீடு செய்தேன். அதன் பின்னரும் நான் கோரிய தகவல்கள் எனக்கு வழங்கப்படாத காரணத்தால் மாண்பமை தகவல் ஆணையத்திற்கு கடந்த 09.09.2022 அன்று விரைவஞ்சல் மூலம் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்திருந்தேன். இந்நிலையில் மேற்படி

பொது தகவல் அலுவலர் கடந்த 23.09.2022 தேதியில் ந.க. எண்.அ1/122/2022ன் என்பதன் மூலம் நான் கோரிய தகவல்கள் மூன்றாம் நபர் தொடர்புடையது என தெரிவித்து அதனை வழங்க மறுத்துள்ளார். கச்சிராயப்பாளையம் கதவு எண்.26, காமராஜர் சாலையில் (எல்எப்.ரோடு) இயங்கி வரும் சூரத் ஆனந்த் சாரீஸ் சென்டர் என்ற ஜவுளி கடைக்கு வடக்கனந்தால் பேரூராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதி மற்றும் வரைபடம் தொடர்பான ஆவணங்களின் நகல் கேட்டு பொது தகவல் அலுவலரான வடக்கனந்தல் செயல் அலுவலருக்கு நான் விண்ணப்பித்திருந்தேன். நான் கோரிய ஆவணங்கள் பொது ஆவணங்களாகும். நான் கோரிய தகவல்களை வழங்கினால் ஊழல் வெளிப்பட்டு விடும் என்ற காரணத்தால் மேற்படி பொது தகவல் அலுவலர் நான் கோரிய தகவல்களை வழங்கவில்லை. மேற்படி ஜவுளிக்கடைக்கு வடக்கனந்தல் பேரூராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதிபடி ஜவுளிக்கடை கட்டடம் கட்டப்படவில்லை. ஜவுளிக்கடை தரைதளத்தில் வாகன நிறுத்துமிடம் இல்லை. இந்த ஜவுளிக்கடை கட்டடம் மூன்று மாடிகள் கொண்டது. இந்த ஜவுளிக்கடை கட்டடத்தில் விதிமீறல்கள் உள்ள காரணத்தால் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் நான் கோரிய தகவல்களை எனக்கு வழங்கவில்லை. மேற்படி ஜவுளிக்கடையின் கட்டட விதிமீறல் காரணமாக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி ஜவுளிக்கடையின் உரிமையாளருக்கு சாதகமாக வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் செயல்பட்டு நான் கோரிய தகவல்களை உரிய காலத்திற்குள் எனக்கு வழங்காமல் காலதாமதமாக மூன்று மாதங்கள் கழித்து நான் கோரிய தகவல்கள் மூன்றாம் நபர் தகவல்கள் என தவறாக மேற்கோள் காட்டி எனக்கு வழங்க மறுத்துள்ளார். இதன் மூலம் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து ஊழலுக்கு துணை போய் உள்ளது தெளிவாகத் தெரிகிறது. மேற்படி ஜவுளிக்கடைக்கு வடக்கனந்தல் பேரூராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதி தொடர்பான கோப்புக்களை தாங்கள் வரவழைத்து பரிசீலனை செய்து பார்த்தால் உண்மை தெரியவரும். எனவே, தாங்கள் தயவு செய்து மேற்படி வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன் நான் கோரிய தகவல்களை எனக்கு வழங்க தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு நீதியின் பெயரால் வேண்டுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் 04.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 09.11.2022அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**மனுதாரர் 09.11.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி நேரடியாக கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை கதவு எண் 26ல் அமைந்துள்ள சூரத் ஆனந்த் சாரீஸ் சென்டர் என்கின்ற ஜவுளி

கடைக்கு வழங்கப்பட்ட கட்டட அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட ஜவுளி கடையின் முன்புறமோ அல்லது கீழ் தளத்திலோ எங்கும் வாகன நிறுத்த இடம் விடாமல் முழுவதும் கட்டடம் கட்டியுள்ளனர். கீழ்தளத்தை வாகன நிறுத்த இடமாக காண்பித்திருந்தாலும், அங்கு வாகனங்களை நிறுத்தாமல், அங்கும் கடையின் ஒரு பகுதி இயங்கி வருகிறது. மேற்கண்ட கடைக்கான வாகன நிறுத்தம் இடம் இல்லாததால், அக்கடைக்கு வரும் நுகர்வோர் கடைக்கு வெளியில் ரோட்டிலேயே விட்டுவிட்டு செல்கின்றனர். இதனால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேற்கண்ட ஜவுளிக் கடைக்கு பக்கவாட்டிலும் இடம் ஏதும் விடப்படவில்லை, இது தொடர்பாக பேரூராட்சிக்கு பலமுறை மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், மேற்கண்ட ஜவுளி கடை கட்டட அனுமதியின்படியே கட்டப்பட்டுள்ளது என்று பேரூராட்சியால் எனக்கு தகவல் அளித்துள்ளனர். ஆனால், மேற்கண்ட ஜவுளி கடை கட்டட அனுமதியின்படி கட்டாமல், விதிமுறைகளை மீறி கட்டியுள்ளனர். இதனால், அரசுக்கு பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள சூரத் ஆனந்த் சாரீஸ் சென்டர் ஜவுளிகடையின் மீதும் பேரூராட்சியால் தக்க நடவடிக்கை எடுத்திடவும், மேலும் விதிமுறைகளை மீறி கட்டடம் கட்ட அனுமதி அளித்த பேரூராட்சி அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**மேலும் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் 9.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"சங்கராபுரம் பேரூராட்சி செயல் அலுவலராகப் பணியாற்றும் நான் கள்ளக்குறிச்சி மாவட்டம் வடக்கனேந்தல் பேரூராட்சியின் செயல் அலுவலராக (பொறுப்பு) கடந்த 3 மாதங்களாக பணியாற்றி வருகிறேன். மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை கதவு எண் 26ல் அமைந்துள்ள சூரத் ஆனந்த் சாரீஸ் சென்டர் என்கின்ற ஜவுளி கடை, வடக்கனந்தல் பேரூராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதியின்படியே கட்டப்பட்டுள்ளது. தரை தளம் மற்றும் முதல் தளத்தில் கடையும், இரண்டாம் தளத்தில் குடியிருப்பும் உள்ளது. கடைக்கு முன்புறம் 1 மீட்டர் தூரத்திற்கு வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக இடம் விடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்."

**மேலும் வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.11.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரிவித்துள்ளார்.**

வடக்கனந்தல் பேரூராட்சி பொது தகவல் அலுவலருக்கு திரு. ஜி. வெங்கடேஷ், 233, எல்.எப்.ரோடு, கச்சிராயபாளையம் என்பவரின் 24.06.2022 தேதிய தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன் கீழான மனு பதிவஞ்சல் வாயிலாக 25.06.2022 அன்று வடக்கனந்தல் பேரூராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றது என்றும் மேற்படி மனு வரப்பெற்ற காலத்தில் பணியிலிருந்த செயல் அலுவலர்/பொது தகவல் அலுவலர் திரு. ச. ஆறுமுகம் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.6.2022 அன்று பணி ஒய்வு பெற்றுள்ளார் என்றும் மேற்படி செயல் அலுவலர் ஒய்வு பெறும் தருவாயில் இருந்ததால்

ஒய்வு பெறுவதற்கான பிரரோணைகள், நிலுவை தணிக்கை பத்திகள் நிவர்த்தி செய்தல் மற்றும் கருத்துருக்கள் தயார் செய்யும் பணியில் ஈடுபட்டதாலும், சொத்துவரி சீராய்வு பணிகள் இருந்ததாலும் வேலை பளுவின் காரணமாக மனுதாரரிடம் இருந்து வரப்பெற்ற மனுவிற்கு பதில் அனுப்ப இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார். வடக்கனந்தல் பேரூராட்சி பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் மேல்முறையீடு செய்யப்பட்டதை தொடர்ந்து மேல் முறையீட்டு அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 2443/2022/பேரூ3 நாள் 29.08.2022ன்படி மனுதாரர் கோரியுள்ள தகவல்களை மனுதாரருக்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அதனை தொடர்ந்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களுக்கு வடக்கனந்தல் பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். அ1/122/2022 நாள் 23.09.2022ன்படி பதிவஞ்சல் வாயிலாக பதில் அனுப்பப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் பதில் கடிதம் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் வடக்கனந்தல் பேரூராட்சிக்கு வரப்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தனது முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட காமராசர் சாலை கதவு எண் 26-ல் அமைந்துள்ள சூரத் ஆனந்த் சாரீஸ் சென்டர் என்ற ஜவுளி கடைக்கு வழங்கப்பட்ட கட்டட அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது மற்றும் மேற்கண்ட ஜவுளி கடையில் முன்புறமோ அல்லது கீழ்த்தளத்திலோ எங்கும் வாகன நிறுத்திற்கு வழிவகை செய்யாமல் முழுவதும் கட்டடம் கட்டப்பட்டிருப்பது குறித்து பேரூராட்சியின் செயல் அலுவலர் கட்டட அனுமதியின் படியே கட்டப்பட்டுள்ளது என்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக இடம் விடப்பட்டுள்ளது என்று மட்டும் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் புகார் மனு அவரது வாக்குமூலம், வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம், அறிக்கை மற்றும் அவரால் சமர்ப்பிக்கபட்டுள்ள இந்நேர்வு தொடர்பான ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியப்படுகின்றன:

வடக்கனந்தல் பேரூராட்சி செயல் அலுவலர் தனது நேரடி விசாரணையில் கடைக்கு முன்புறம் 1 மீட்டர் தூரத்திற்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக இடம் விடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். செயல் அலுவலர் தெரிவித்துள்ள 1 மீட்டர் இடைவெளியில் இருசக்கரவாகனங்கள் நிறுத்துவதே சிரமாக இருக்கும். அப்படியே அங்கு இருசக்கர வாகனமோ, நான்கு சக்கர வாகனமோ நிறுத்தப்பட்டால் அங்கு போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூராக இருக்கும்.

பேரூராட்சியின் செயல் அலுவலர் இது குறித்து வரைபடமோ ஆவணங்களோ எதனையும் முறைமன்றத்தில் உரிய விவரங்களை அளிக்கவில்லை. மேலும் கட்டட விதிகள்படி மேற்படி ஜவுளி கடை கட்டடப்பட்டுள்ளதா என்பது குறித்தும் போதிய விவரங்கள் அளிக்க செயல் அலுவலர் தவறியுள்ளார். இச்செயல் கண்டனத்திற்குரியது.

மேற்கண்ட ஜவுளி கடை அனுமதி பெற்ற வரைபடத்தின்படியே கட்டப்பட்டுள்ளன என்கின்ற விவரத்தையும், மேலும் மேற்கண்ட கட்டடத்தின் பக்கவாட்டில் இடம் விடப்பட்டுள்ளதா என்கின்ற

விவரத்தையும் செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவிக்கவில்லை. இத்தகைய செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது.

மனுதாரர் திரு. G. வெங்கடேஷ் என்பவர் தெரிவித்துள்ள வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலை கதவு எண். 26–ல் அமைந்துள்ள சூரத் ஆனந்த் சாரீஸ் சென்டர் என்ற ஜவுளிகடை முறைப்படி பெறப்பட்ட கட்டட அனுமதியின்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்திட பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் நிலையில் ஒருவரை நியமித்து கட்டட அனுமதி அளிக்கப்பட்டதற்கும், கட்டப்பட்டுள்ள கட்டத்தை ஒப்பீடு செய்தும் மேற்கண்ட கடைக்கான வாகனங்கள் நிறுத்திடமிடம் (Parking Space) முறையாக விடப்பட்டுள்ளதா என்பது குறித்துமான விரிவான அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 நாட்களுக்குள் அனுப்புமாறும் மேலும், இந்நிகழ்வில் முறைகேடுகள் இருப்பின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் பேரூராட்சிகளின் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 21–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. G. வெங்கடேஷ்
நெ.233, எல்.எப். ரோடு, கச்சிராயப்பாளையம்
கள்ளக்குறிச்சி மாவட்டம். 606 207

2) செயல் அலுவலர் (மு.கூ.பொ)
வடகனந்த்ல்பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர்நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம் ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.